அவர்களுக்கு இரண்டு பள்ளிகளில் பணியாற்றிய காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே யார் யார் என்று வருமானால் அதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

Oriental High School, Mutharasanallur

* 203 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the staff grant due to the Oriental High School, Mutharasanallur in the Tiruchirappalli Educational District for the months of April 1970, November and December 1972 and January to May 1973, has not been released and that the teachers of that school were not paid the salary due to them for these months;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken to pay the teachers their legitimate dues?

முத்தரசநல்லூர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி

திரு. பி. ஆர். தாமஸ் (திரு கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்திலுள்ள முத்தரசநல்லூர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளிக்கு, 1970 ஏப்ரல் திங்கள், 1972-ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள், 1973 ஜனவரி திங்களிலிருந்து மே திங்கள் ஆகிய மாதங்களுக்கு ஆசிரியர் பணியாளர் மானியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா? அப்பள்ளி ஆசிரியர்களுக்கு அம்மாதங்களுக்குச் சேர வேண்டிய சம்பளம் கொடுக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

(உ) ஆசிரியர்களுக்குச் சேர வேண்டிய உரிய சம்பளத்தைக் கொடுக்க எடுத்துள்ள நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருச்சிராப்பள்ளி, முத்தரசநல்லூரில் உள்ள கீழ்த்திசைமொழி உயர்நிலைப்பள்ளிக்கு வழங்க வேண்டிய ஆசிரியர் சம்பள மானியம் 1971 ஏப்ரல் 1972 நவம்பர், 1973 மே ஆகிய மூன்று திங்களுக்கு வழங்கப்படவில்லை.

(இ) & (உ) இப்பள்ளியில் பணியாற்றிய பயிற்சி பெறாத ஆசிரியர் ஒருவர் தனக்குச் சேரவேண்டிய ஊதிய பாக்கியைப் பெறும் பொருட்டு அப்பள்ளிக்கு 1971 எப்ரல் மாதத்துக்கு வழங்கப்படும் சம்பள மானியத்தை கோர்ட்டு மூலம் ஈடு (attachment) வாங்கியுள்ளார். அப்படியிருந்தும் அப்பள்ளி நிர்வாகி, அவ்வாசிரியருக்குச் சேரவேண்டிய சம்பள பாக்கியைத் தராததால், கோர்ட்டு தீர்ப்பை செயல்படுத்த அவ்வாசிரியர் அப்பள்ளியில் பணிசெய்த காலத்துக்குரிய ஊதியத்தை 6 விழுக்காடு வட்டியுடன் சேர்த்து கணக்கிட்டு மொத்தம் ரூ. 3,045ஐ திருச்சிராப்பள்ளி தலைமை சார்பு நீதிபதி (Principal-Sub Judge) அவர்களுடைய பேருக்கு செலுத்தப்பட்டது. 1970, எப்ரலுக்குச் சேரவேண்டிய சம்பள மானியம் 1970–71–ஆம் ஆண்டிலேயே பள்ளிக்குத் தரப்பட்டுவிட்டது. 1972–73-ஆம் ஆண்டில் அப்பள்ளியில் பல வகுப்புகளில் குறைந்த பட்சம் தேவையான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லாத காரணத்தால் 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதியில் அப்பள்ளி திடீரென்று மூடப்பட்டது. சம்பள மானியத் தொகையை கணக்கிட்டுத்தரத் தேவையான ஆவணங்கள் பள்ளிக் கல்வித்துறைக்குக் கிடைக்கவில்லை. அந்த ஆவணங்களைப் பெற்றதும் மானியத் தொகையை கணக்கிட்டு வழங்க மாவட்டக் கல்வி அலுவலர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

Scholarships for Research in Tamil Manuscripts.

* 204 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of Thiru K. Arivazhagan) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to (i) institute scholarships for studying and scrutinising Tamil manuscripts in the Government Oriental Manuscripts Library in Madras, (ii) allot funds for it, for preparing a comprehensive catalogue with subject, name and title, (iii) upgrade it into a Research Institute, and (iv) construct a separate building to house the same; and

(*b*) whether steps are being taken to acquire manuscripts now in private hands?

தமிழ் எட்டுச் சுவடிகளை ஆராய்வதற்குப் படிப்புதவித் தொகைகள்

திரு எஸ். எஸ். தென்னரசு (திரு க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) (i) சென்னை அரசு கீழ்த்திசை எட்டுச் சுவடிகள் நூலகத்தில் உள்ள தமிழ் எட்டுச் சுவடிகளைப் படிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும்